செ.வெ.எண் 151 நாள் 22-10-07

# தமிழ்நாடு மின்சார வாரிய ஊழியர்களுக்கு 2006-2007ஆம் ஆண்டிற்கான போனஸ் அறிவிப்பு

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு 2006-2007ஆம் ஆண்டு போனஸ் வழங்குவது குறித்து மின்சார வாரியத் தலைவர் மற்றும் அதிகாரிகளுடன் இன்று கலந்து ஆலோசிக்கப்பட்டதுடன், மின்வாரியத்தின் அனைத்துத் தொழிற் சங்கத் தலைவர்களுடன் கலந்து பேசியதின் அடிப்படையில் தமிழ்நாடு மின்வாரியத்தின் நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களது ஒப்புதலுடன், இந்த ஆண்டு தமிழ்நாடு மின்சார வாரிய ஊழியர்களுக்கு 20 சதவிகிதம் போனஸ் மற்றும் கருணைத் தொகையாக (போனஸ் 8.33 சதவிகிதம் மற்றும் கருணைத் தொகை 11.67 சதவிகிதம்) வழங்குவது என முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இதனால் 66,006 ஊழியர்கள் பயனடைவார்கள். மேலும் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றும் சுமார் 21,600 ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கும் மற்றும் 3,466 பகுதி நேர ஊழியர்களுக்கும் ரூ. 1,000/- கருணைத் தொகையாக வழங்கப்படும். மத்திய அரசு அறிவித்துள்ள போனஸ் சட்டத்திருத்தத்தினால் தனிநபர் போனஸ் மற்றும் கருணைத்தொகை 20 சதவிகிதமாக இருக்கும்பொழுது அதிகபட்சமாக ரூ.6,000/-லிருந்து ரூ.8,400/-ஆக அதிகரிக்கிறது. இந்த சட்டத் திருத்தத்தினால் வரக்கூடிய கூடுதல் தொகையை வட்டியில்லா முன்பணமாக மின் ஊழியர்களுக்கு வழங்கப்படும். இந்த முன்பணமானது சட்டத்திருத்தம் அமலுக்கு வந்தபிறகு பட்டியலில் சரிக்கட்டப்படும். இதனால் மின்வாரியத்திற்கு இவ்வாண்டு ரூ. 57.95 கோடி செலவாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

நாள்: 22-10-2007

(ஆற்காடு நா. வீராசாமி)
மின்சாரத்துறை அமைச்சர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.